மாநகராட்சி மாமன்றம்
மக்கள் சேவையே
இறைவன் சேவை
கரூர்

கரூர்
மாநகராட்சி

வரவு செலவு திட்ட அறிக்கை
2022 - 2023

கரூர் மாநகராட்சி

வரவு - செலவு திட்ட அறிக்கை 2022-2023

திருக்குறள்

தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செயல்வார்க்
கரும்பொருள் யாதொன்றும் இல்.

குறள் : 462 அதிகாரம் : 47

விளக்கம்

செய்ய வேண்டிய செயலை ஆலோசித்து, பின் தானும் அமைதியாகச் சிந்தித்து முடிக்க வல்ல செயல் வீரர்க்கு அடைய முடியாத பலன்கள் எவையும் இல்லை. அவ்வாறு செய்வோர் அரியவற்றையும் மிக எளிதில் அடைவர் என்பது கருத்து.

– திருவள்ளுவர்

முத்தமிழ் அறிஞர்

டாக்டர். **மு. கருணாநிதி** அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள்

மாண்புமிகு திரு. **கே.என். நேரு** அவர்கள்

நகராட்சி நிர்வாகம், நகர்ப்பகுதி மற்றும்

குடிநீர் வழங்கல் துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. **வி.செந்தில் பாலாஜி** அவர்கள்

மின்சாரம், மதுவிலக்கு மற்றும்

ஆயத்தீர்வைத்துறை அமைச்சர்

திருமதி. வெ. கவிதா கணேசன்
மாண்புமிகு மேயர்

முகவுரை

இந்தியாவிற்கே வழிகாட்டியாக திகழும் மக்களின் **முதல்வர் மாண்புமிகு தளபதியார் மு.க.ஸ்டாலின்** அவர்களின் நல்லாசியுடனும், உள்ளாட்சியில் நல்லாட்சி கண்ட தளபதியின் வழியில் மாண்புமிகு நகர்புற மேம்பாட்டுத்துறை அமைச்சர் அண்ணன் **கே.என். நேரு** அவர்களின் ஆசியுடனும், 83 ஆயிரம் குடும்பங்களின் தலைமகனும் கரூர் மக்களின் ஒரே நம்பிக்கையாக திகழும் எங்களின் மண்ணின் மைந்தர் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் அண்ணன் **வி.செந்தில்பாலாஜி** அவர்களின் வழிகாட்டுதல்படி மாமன்றத்தில் முதல் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்வதில் நான் பெருமிதம் கொள்கிறேன்.

சேர சோழ மன்னர்களின் வரலாற்று தலைநகரமாக திகழ்ந்த வஞ்சி மாநகரத்தை 148 ஆண்டுகால பாரம்பரிய மிக்க கரூர் நகராட்சியை முதன் முதலாக மாநகராட்சி ஆக்கி தந்த **முதல்வர் மாண்புமிகு தளபதியார் மு.க.ஸ்டாலின்** அவர்களுக்கும் எங்கள் மண்ணின் மைந்தர் அமைச்சர் அண்ணன் **வி.செந்தில்பாலாஜி** அவர்களுக்கும் ஒட்டுமொத்த கரூர் மக்களின் சார்பாக இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

"**முடியுமா நம்மால்**" என்பது தோல்விக்கு முன்பு வரும் தயக்கம். "**முடித்தே தீருவோம்**" என்பது வெற்றிக்கான தொடக்கம் என்ற **கலைஞரின்** பொன்மொழியை தனதாக்கிக்கொண்டு இரவு பகல் பாராமல் தமிழக மக்களுக்காக செயல்பட்டு வரும் **தமிழக முதல்வர் தளபதியாரின்** ஆசியோடும், இம்மண்ணின் மைந்தர் அமைச்சர் அண்ணன் **வி.செந்தில்பாலாஜி** அவர்களின் வழிகாட்டுதல் படியும் கரூர் மாநகராட்சி தலை சிறந்த மாநகராட்சியாக உயர்த்த தேவையான அனைத்து ஆக்கப்பூர்வமான திட்டங்களையும் மாமன்ற உறுப்பினர்களின் ஆதரவோடு செவ்வெனே செய்து முடிப்பேன் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

"**அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்**" என்ற **இளங்கோவடிகளின்** வார்த்தைகளுக்கு வடிவம் தருகின்ற விதத்தில் கரூர் மாநகராட்சியில் ஒரு நேர்மையான, தூய்மையான நிர்வாகத்தை தருவதோடு அத்தியாவசிய தேவைகளான குடிநீர் பிரச்சனையை தேர்தல் நேரத்தில் எங்கள் மண்ணின் மைந்தர் மாண்புமிகு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் அண்ணன் **வி.செந்தில்பாலாஜி** அவர்கள் வாக்குறுதியாக தந்ததை கருத்தில் கொண்டு தினந்தோறும் குடிநீர் வழங்குதல் மற்றும் ஆண்டுக்கு 6000 கோடி அளவிற்கு ஜவுளித்துறை, கொசுவலை ஏற்றுமதி தொழில் செய்து பெருமளவு அன்னிய செலாவணியை ஈட்டும் கரூர் மாநகரம் Clean & Green City அதாவது தூய்மை மற்றும் பசுமை மாநகரமாக மாற்றுவதற்கு மாமன்ற உறுப்பினர்கள் உறுதுணையோடு நான் பாடுபடுவேன் என்று உறுதி கூறுகிறேன்.

அன்புடன்

திருமதி. வெ. கவிதா கணேசன்
மாண்புமிகு மேயர்

ந. இரவிச்சந்திரன்
ஆணையாளர்

முகவுரை

அனைவருக்கும் வணக்கம்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் நகர்பகுதி மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி கரூர் மாநகராட்சியில் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்தல், திடக்கழிவு மேலாண்மையில் பொதுமக்கள் பங்களிப்புடன் விழிப்புணர்வை ஏற்படுத்தி தூய்மையான மாநகரமாக மாற்றுதல். பொதுமக்களுக்கு உடற்பயிற்சி செய்வதற்கு பூங்காக்களை ஏற்படுத்துதல், பாதாள சாக்கடை வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ள மாநகராட்சி நிர்வாகம் முனைப்பான நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்போதைய நிதிநிலை அறிக்கையில் மக்களின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளது. இத்திட்டங்களை நிறைவேற்றிட பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகர மேயர், துணை மேயர், மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் இந்த தருணத்தில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புடன்

ந. இரவிச்சந்திரன்
ஆணையாளர்

ஸ்ரீகல்யான பசுபதீஸ்வரர் திருக்கோவில்

வெண்ணைமலை
பாலமுருகன் திருக்கோவில்

ஸ்ரீ கல்யாண வெங்கட்ரமண சுவாமி
திருக்கோவில்